# ஈஸ்டர் ஞாயிறு, இயேசு மரித்தோரிடத்தில் இருந்து எழுந்து என்றென்றும் வாழ்கிறார்

சிறுவர் கல்வி செயல்பாடுகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்க.

குழந்தைகள் இந்தப் படத்தை வரையலாம் அல்லது வண்ணம் தீட்டலாம்.



மரித்தோரிடத்தில் இருந்து எழுந்த இயேசுவின் கதையை ஆசிரியரோ அல்லது ஒரு பெரிய பிள்ளையோ வாசிக்கட்டும் அல்லது கூறட்டும். மாற்கு 15:1-16:8. அது, இயேசு எவ்வாறு மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதைக் கூறுகிறது.

கதையைக் கூறிய பின் இந்தக் கேள்விகளைக் கேட்கவும். ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் பதில் வருகிறது.

மரித்து உயிர்த்தெழுந்த போது இயேசு நமக்காக என்ன செய்தார்? (இயேசுவின் இரத்தம் நமது பாவங்களை மூடியது. அவரது உயிர்த்தெழுதல் அவரை நம்புகிற யாவருக்கும் ஜீவனைத்தருகிறது).

பிலாத்து இயேசுவை எப்படி அழைத்தான் (யூதரின் இராஜா, மாற்கு 15:2).

இயேசுவைப் போர்ச் சேவகர்கள் எவ்வாறு நடத்தினர் (மாற்கு 15:17-19).

அவரது தலையின் மேல் வைத்த அடையாளத்தில் அவர்கள் என்ன எழுதினார்கள் (மாற்கு 15:26).

இயேசு இறப்பதற்கு முன் சத்தமிட்டு கூறியது என்ன (மாற்கு 15:34).

அரிமத்தேனாகிய யோசேப்பு என்ன செய்தான் (மாற்கு 15:43-46).

கல்லறையின் வாசலில் என்ன வைக்கப்பட்டது? (மாற்கு 15:46).

யார் கல்லறைக்கு சென்று அது வெறுமையாய் இருப்பதைக் கண்டனர்? (மாற்கு 16:1).

## ஈஸ்டர் கதையின் பகுதிகளை நாடகமாக்குக

சபைத் தலைவருடன் பேசி ஆராதனை வேளையில் பிள்ளைக் பெரியவர்களுக்காக நாடகத்தை வழங்க ஏற்பாடு செய்க. உங்கள் நேரத்தை நாடகத்தை தயாரிப்பதில் குழந்தைகளுடன் செலவிடவும். சில பகுதிகளை விட்டு விடலாம்.

வேதத்தில் இருந்து மேலும் சேர்க்கலாம்.

பெரிய பிள்ளைகள் தயாரிப்பதில் சிறுவர்களுக்கு உதவி செய்யவும்.

பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ இப்பாகங்களை ஏற்கலாம்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி, பிள்ளைகள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்துக.

**போர்ச் சேவகர்கள்:** சாட்டை, முள்முடி, மேலங்கி போன்றவைகளை குறிக்க பொருட்களை ஆயத்தம் செய்க.

**ஆசாரியன்**

**இயேசு**

**பிலாத்து**

**யோசேப்பு:** ஒரு துணியை ஆயத்தம் செய்க

## சிறிய பிள்ளைகள் ஏற்கும் வேடம்

**பெண்:** பரிமள தைலத்தைக் குறிக்க ஒரு பாட்டில்.

**கூட்டம்**

**தேவ தூதன்**

ஈஸ்டர் நாடகத்தை மூன்று பகுதிகளாக வழங்கலாம்.

## முதல் பகுதி (மாற்கு 15:1-20)

**கதை கூறுபவர்:** மாற்கு 15:1-20 ல் இருந்து முதல் பகுதியை வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறிவிட்டு, அறிவிக்க வேண்டியது, "ஆசாரியன் கூறுவதைக் கேளுங்கள்."

**ஆசாரியன்:** "ஐயா! இவன் எங்கள் சட்டங்களை மீறினான். இவன் சாக வேண்டும்!"

**பிலாத்து** : "இயேசுவே, நீர் யூதருடைய இராஜாவா?"

**இயேசு** : "ஆம்!"

**பிலாத்து** : ஆச்சரியமடைந்து, பின் கூறுகிறான், "நான் இந்த மனிதனிடம் எந்தத் தவறையும் காணவில்லை. ஜனங்களே, நான் இந்த மனிதனை விடுதலை செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா?"

**கூட்டம்** : கோபத்துடன் கத்துகின்றனர், "பராபசை விடுதலை செய்! இயேசுவை சிலுவையில் அறை!"

**பிலாத்து** : "சேவகர்களே! இவரைக் கொண்டு போய் சிலுவையில் அறையுங்கள்!"

**போர்ச் சேவகர்கள்:** இயேசுவை சிலுவையில் அறைவது போல் நடித்தல். ஒரு மேலங்கியையும் முள்முடியையும் அவருக்கு அணிவித்தல். கேலி செய்து கூறுதல், "யூதரின் இராஜாவே வாழ்க" "இதோ உமது கிரீடம்", "இதோ உமது மேலாடை", "இதோ உமது சிலுவை! சுமந்து செல்லும்!"

## இரண்டாம் பகுதி (மாற்கு 15:22-47)

**கதை கூறுபவர்:** இரண்டாவது பகுதியைக் கூறவும் அல்லது வாசிக்கவும் (மாற்கு 15:22-47). கதை கூறுபவர் பேசுகின்ற போது, இயேசு குனிந்து பாரமான சிலுவையை சுமப்பது போல் அறைக்குள் நடக்கவும். கதை கூறுபவர் முடிக்கும் போது, போர்ச் சேவகர்கள் சிலுவையைத் தூக்கி தரையில் வைப்பது போல் நடிக்கவும்.

**கதை கூறுபவர்:** "போர்ச் சேவகர்கள் கூறுவதைக் கேளுங்கள்!"

**போர்ச் சேவகர்கள்:** இயேசுவை சிலுவையில் அறைவது போல் நடித்தல். கூறவும்: "நாம் அவருடைய ஆடைகளுக்கு சீட்டுப் போடுவோம்" (சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தூக்குவது போல் நடிக்கவும். ஒரு நாற்காலியில் கைகளை விரித்து நிற்கவும்).

**கூட்டம்** : "பாருங்கள். இயேசு இராஜா என்று எழுதப்பட்டிருக்கிறது." "ஹா! இயேசுவே உன்னை நீயே இரட்சித்துக் கொள்."

**ஆசாரியன்:** "இயேசுவே! உனது வல்லமையைக் காட்டு! சிலுவையில் இருந்து இறங்கி வா!"

**இயேசு** (சத்தமாக) "என் தேவனே! ஏன் என்னைக் கை விட்டீர்."

**பெண்** : "ஓ! இல்லை! இயேசு இறந்து போய்விட்டார்!"

## மூன்றாம் பகுதி (மாற்கு 16:1–8)

**கதை கூறுபவர்:** கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும் (மாற்கு 16:1–8). **கூறுதல்:** "யோசேப்பு கூறுவதைக் கேளுங்கள்!"

**யோசேப்பு:** "பிலாத்துவே, இயேசுவின் உடலை நான் அடக்கம் செய்ய உத்தரவு கொடும்!" (பெண் பார்க்கிறாள்). இயேசுவை சிலுவையில் இருந்து எடுத்து, துணியில் சுற்றி, கல்லறைக்குள் வைத்து (ஒரு மேசையின் அடியில்). ஒரு கல்லை (ஒரு நாற்காலி) அதன் முன் வைக்கவும்.

**கதை கூறுபவர்:** "மூன்றாவது நாள் அந்த மாபெரும் அற்புதம் நிகழ்ந்தது." கல்லை எடுக்கவும். இயேசு எழுந்து ஒரு பக்கமாக நடத்தல்.

**பெண்** : தைலக் குப்பியுடன் கல்லறைக்கு போதல். கண்ணீரைத் துடைத்தல். "இந்த பெரிய கல்லை யார் அகற்றுவது? அதோ! கல் புரட்டப்பட்டு விட்டது. பாருங்கள்! ஒரு தேவ தூதன்!"

**தேவ தூதன்:** "இயேசு உயிரோடு இருக்கிறார். சீஷர்களுக்குப் போய்ச் சொல்!"

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்த உடன், பிள்ளைகளுக்கு நன்றி சொல்லவும்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததனால் நமக்காக என்ன செய்தார் என்று பிள்ளைகள் பெரியவர்களிடம் **கேட்கவும்.** அவரது இரத்தம் நமது பாவங்களை மூடியது, அவரது உயிர்த்தெழுதல் அவரை நம்புகிற யாவருக்கும் ஜீவனை கொடுத்தது என்ற கருத்ததுக்கள் பதிலில் இருக்க வேண்டும்.

இயேசு சிலுவையில் அறையுண்டு இருப்பது போலவும், கல்லறைக்கு வெளியே உயிரோடு நிற்பது போலவும் சிறுவர்கள் **படங்கள்** வரையட்டும்.

அவர்கள் இந்தப் படங்களை ஆராதனை வேளையில் பெரியவர்களுக்குக் காட்டி, அது, எவ்வாறு இயேசு நமக்காக மரித்து, மூன்றாவது நாள் உயிரோடு எழுந்தார் என்பதை காட்டுகிறது என்று **விளக்கவும்.**

**மனன வசனம்:** 1 பேது. 1:3

**கவிதை:** சங். 21:1–4 வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும். இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி பெரிய பிள்ளைகள் கவிதை எழுதலாம்.

**ஜெபம்:** "அன்பான இயேசுவே. இன்று நாங்கள் உமது இறப்பையும், உயிர்த்தெழுதலையும் ஞாபகப்படுத்துகிறோம். உமது மரணத்தின் மூலம் எங்களுக்கு பாவமன்னிப்பு கிடைத்தது. உமது உயிர்த்தெழுதல் எங்களுக்கு ஜீவனை அளிக்கிறது. நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net